1973 நவம்பர் 24]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : *நிரந்தரமாக்கப்பட்ட சப் மாஜிஸ்ரேட்டுகள் நீண்ட நாள் விடுமுறையில் செல்கின்றபோது அரசாங்கத்தில் பணியாற்றுகின்ற ஒரு சிலரை அந்தப் பணியில் அமர்த்துகிறார்கள். அந்த முறையைத் தவிர்த்து, ஒருசில வழக்கறிஞர்களுக்கு பயிற்சியளித்து, அவர்களில் ஒரு பட்டியல் தயாரித்து, அந்தப் பட்டியலில் இருப்பவர்களையே நியமனம் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?*

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *அரசாங்க உத்தியோகஸ்தர்களில் இந்த வேலைக்குத் தகுதி வாய்ந்தவர்களை—நீதித்துறையில் பணியாற்றுகின்ற சில குவாலிஃபிக்கேஷன் உள்ளவர்களை இந்தப் பணிக்கு நியமிக்கிறார்கள். அதற்கு ஒரு பேனல் தயாரித்து, அந்த பேனலில் இருப்பவர்களைப் பார்த்து, உயர்நீதிமன்றம் இடைக்கால பதவியில் நியமனம் செய்கிறது.*

கைதிகளுக்கு வழங்கப்பெறும் உணவு

** 375* **வினா—திரு. என். கிட்டப்பா:** *மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மூன்றாம் வகுப்பு கைதிகளுக்கு தினமும் வழங்கப்படும் உணவின் செலவுத்தொகை என்ன?

(இ) எந்த ஆண்டில் இத்தொகை நிர்ணயிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *(அ) & (இ) மூன்றாம் வகுப்பு கைதிகளுக்கு கொடுக்கப்படவேண்டிய உணவு வகைகளின் அளவுகள்தான் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றதே தவிர ஒவ்வொரு கைதிக்கும் எவ்வளவு தொகை செலவிடப்பட வேண்டும் என்று நிர்ணயிக்கப்படவில்லை. சென்னை மத்திய சிறையிலுள்ள மூன்றாம் வகுப்பு கைதிகளைத் தவிர இம்மாநிலத்திலுள்ள மற்ற எல்லா மூன்றாம் வகுப்பு கைதிகளுக்கும் ஆள் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு சராசரி ரூ. 1.35 செலவாகிறது. சத்துணவு வழங்கும் திட்டம் முதல் கட்டமாக சென்னை மத்திய சிறைச்சாலையில் செயல்படுத்தப்படுவதால் அங்கு ஒவ்வொரு மூன்றாம் வகுப்பு கைதிக்கும் ஒரு நாளைக்கு சராசரி ரூ. 1.56 செலவாகிறது.*

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள், பணம் நிர்ணயம் செய்யப்படுவதில்லை, உணவின் அளவுதான் நிர்ணயம் செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். இப்போது சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு அளிக்கப்படும் உணவு போதாது. ஆகவே, உணவின் அளவை அதிகரிப்பதோடு தரமான உணவைக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பெரும்பாலும் அங்கே கொடுக்கின்ற உணவு சத்துள்ளதாகத்தான் இருக்கிறது. சிறையிலே இருப்பவர்களுக்கு உரம் ஊட்டக்கூடிய அளவில் அமைந்திருக்கிறது என்பதை அனுபவபூர்வமாகக் கண்டேன். ஆனால் கொடுக்கின்ற முறையில்தான் கொஞ்சம் மாற்றம் இருப்பதாகத் தெரிகிறது. அதற்கு மாற்று யோசனை செய்ய வேண்டுமென்றும், அதை செயல்படுத்த முன்வரவேண்டுமென்றும் கேட்டுள்ளோம். அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எஸ். வடிவேல் : இன்றைக்கு உணவு விலை முன்னால் இருந்ததைவிட இரண்டு மடங்கு மூன்று மடங்கு கூடிவிட்டது. ஆகவே, முன்னால் கொடுத்த அளவைப் பார்க்காமல் கைதிகளின் உடல் நலம் கெடாமல் இருக்க அவர்களுக்கு வேண்டிய அளவு கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் நான் பதிலிலே சொன்னேன். உணவு விலை எப்படி இருந்தாலும், தனி மனிதனுக்கு தேவை என்ன என்பதைக் கணக்கிட்டு, பருப்பு, மோர் போன்ற பொருட்கள் எவ்வளவு தேவை என்று கணித்து, அந்த அளவுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சாதாரணமாக ஒரு கைதிக்கு ரூ. 1.35, ரூ. 1.56 செலவாகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு சிறைச்சாலைகளிலே வழங்கப்படுகின்ற உணவானது மிகவும் தரக் குறைவாக இருக்கிறது. அதிலும் அங்கே உணவைத் தயாரிக்கின்ற இடத்தைப் பார்த்தால் மிகவும் மோசமாக இருக்கிறது. பாத்திரங்கள் எல்லாம் பழைய பாத்திரங்களாக இருக்கின்றன. இதை சீர் செய்ய அரசாங்கம் பாளையங்கோட்டை போன்ற சிறைச்சாலைகளில் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1973 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இந்த மாதிரி நல்ல யோசனை சொன்னதற்கு நன்றி கூறுகிறேன். அவர்கள் 1967-க்கு முன்னால் சிறைக்கு போனதில்லை. நான் போயிருக்கிறேன் பார்த்திருக்கிறேன். பாத்திரங்களைப்பற்றிச் சொன்னார்கள். முன்பெல்லாம் மாட்டுக்கு இரும்புச் சட்டியிலே தண்ணீர் கொண்டுவருவதைப்போல தூக்கி வருவார்கள். இந்த அரசு வந்த பிறகு அவைகளை மாற்றி அலுமினியப் பாத்திரங்களைக் கொடுத்திருக்கிறது. முன்னாலே உணவு பாத்திரங்களைக் கொண்டுவருகிறார்கள் என்றால் ஒரு பர்லாங் தூரத்திலிருக்கும்போதே துர்நாற்றம் அடிக்கும். இப்போது அந்த நாற்றம் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், சென்னை நகரில் மட்டும் அதிகமாக உணவு கொடுப்பதாகச் சொன்னார்கள். அதேமாதிரி மற்ற இடங்களில் இருக்கிற மத்திய சிறைச்சாலைகளிலும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? சென்னை மத்திய சிறையில் இட்லி கொடுப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அதைப்போல மற்ற மத்திய சிறைகளிலும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சென்னை சிறையில் கஞ்சி கொடுத்ததை மாற்றி, அதற்குப் பதிலாக இட்லி, உப்புமா கொடுக்கிறோம். அதற்கு பிரப்பரேஷன் செலவு கொஞ்சம் அதிகமாகிறது. படிப்படியாக இந்த முறையை மற்ற சிறைச்சாலைகளுக்கும் நீட்டிக்க வேண்டுமென்று அரசு முயற்சி செய்கிறது. அதனால் எல்லோரும் சிறைக்கு செல்லவேண்டுமென்று எண்ணிவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கணபதி : தலைவரவர்களே, 1963-ம் ஆண்டில் நான் சிறைக்குச் சென்றிருக்கிறேன். அப்போது வாரத்தில் 6 நாள் கீரைத்தண்டு சாம்பார் போடுவார்கள். இப்போது அதில் மாறுதல் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கீரைத்தண்டு போட்டால் அங்கே இருப்பவர்களுக்கு உணர்ச்சி குறையும், வலு குறையும் அதனால் போடப்படுகிறது என்று சொல்லப்பட்டது. அந்த முறையை நம்முடைய அரசாங்கம் பின்பற்றவில்லை. அதனால் அவர்கள் மீண்டும் சிறைக்குச் செல்ல முயற்சிக்க வேண்டாம்.

[1973 நவம்பர் 24

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, சிறைச்சாலைகளில் கூழ் ஊற்றுகிறார்கள். அதைச் சாப்பிடுவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதிலே உப்பும் இல்லை, சப்பும் இல்லை. ஆகவே, இந்த முறையை மாற்றி, இட்லி கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது சென்னை சிறைச்சாலையில் மட்டும்தான் இந்த முறை கொண்டுவரப்பட்டிருக்கிறது. எல்லாச் சிறைகளுக்கும் இந்த முறையைக் கொண்டுவரும் முயற்சி அரசின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, வீட்டிலே சமைப்பதை விட சிறைச்சாலையிலே சமைப்பது ருசிகரமாக இருக்கிறது என்று எண்ணி, வெளியே இருக்கின்ற சிலர் சிறைச்சாலைக்குப் போவதற்காக ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியை நான் அனுமதிக்கவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, சமதர்மக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டிருக்கின்ற இந்த அரசு சிறைகளிலே முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, மூன்றும் வகுப்பு என்று இருப்பதை மாற்றி, எல்லோருக்கும் ஒரே வகுப்பு என்ற அடிப்படையை ஏற்படுத்துமா ? அதுமட்டுமல்ல. பாளையங்கோட்டை சிறையிலே சோளக்காடி கொடுத்தார்கள். ஸ்தாபன காங்கிரஸ் ஊழியர்கள் அண்மையில் சிறையில் இருந்தபோது சோளக்காடி கொடுத்தார்கள். அது சுத்தமாகவும் இல்லை. அதைச்சாப்பிட்ட பலர் இன்னும் ரத்த பேதி போன்ற பல நோய்களினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சோளக்காடிக்குப் பதிலாக அரிசிக் கஞ்சியாவது கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சோளக் களி, கேப்பை எல்லாம் சத்துள்ள உணவு என்றுதான் போடுகிறார்கள். சத்து இல்லை என்று சொல்ல முடியாது. தயார் செய்யும் முறையில் தவறு இருக்குமானால் அது கவனிக்கப்பட வேண்டியது. மேலும் ஏ, பி, சி கிளாசைப்பற்றிச் சொன்னார்கள். நீண்டகாலமாக இந்த முறை இருக்கிறது. சிறைச்சாலைக்கு வெளியே இருக்கின்றபோது எந்த

1973 நவம்பர் 24]

விதமான வாழ்க்கையை அனுபவித்தார்களோ, அந்த அளவுக்கு சிறைகளிலே வசதி செய்து கொடுக்கவேண்டியிருக்கிறது. அதை குறைக்க முடியாது. ஆனால் வழக்குகளின் தன்மையைப்பொறுத்து, குற்றத்திற்கு தக்கபடி அவர்களுக்கு இந்த வகுப்புகளை மாற்றிக் கொடுக்கலாமா என்பதைப் பரிசிலனை செய்துகொண்டிருக்கிறோம். அண்மையில் நடைபெற்ற ஒரு மாநாட்டிலும் குற்றத்திற்குத் தக்கபடி மாற்றலாம் என்ற யோசனை தெரிவிக்கப்பட்டது. அது பரிசிலனை செய்யப்படுகிறது.

Training for Extension Staff in Agriculture Department.

* 376. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to intensify the training given to the Extension Staff of the Agricultural Department; and

(*b*) if so, the details thereof?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) குடுமியாமலை அண்ணா பண்ணையில் ஓர் ஆண்டுக்கு ரூ. 3.48 லட்சத்தில் வேளாண்மைப் பயிற்சி நிறுவனம் ஒன்று ஏற்படுத்துவதுபற்றி வேளாண்மை இயக்குநர் அனுப்பியுள்ள செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. என். டென்னிஸ் : இது எப்போது நடைமுறைக்கு வரும்? எத்தனை மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அங்கே ஏற்கனவே ஒரு பள்ளி இருக்கிறது, மேற்கொண்டு எவ்வளவு செய்யவேண்டும் என்பதுதான் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அதுபற்றி எதுவும் இன்னும் முடிவாகவில்லை.